1975 ஏப்ரல் 21]

போது, அங்கு இருக்கக்கூடிய கட்டாயத்தைப் பற்றியும், அங்கு இருக்கக் கூடிய சூழ்நிலையைப் பற்றியும் எடுத்துச்சொல்லியிருக்கிறோம். அவர்களை அங்கு இருக்கக்கூடிய வழக்கறிஞர்கள் சங்க சார்பிலே அங்கே அழைத்துச் சென்று தேனீர் விருந்து கொடுத்து நிலைமைகளை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மற்றும் அங்கு இருக்கக்கூடிய அத்தனை பேரும் அதாவது பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் வழக்கறிஞர்கள் எல்லோரும் அவரிடத்திலே போய் அங்கு இருக்கக்கூடிய சிரமத்தை எடுத்துச் சொன்னார்கள். காரணம் என்னவென்று சொன்னால், அங்கே ஏற்படக்கூடிய கிரிமினல் வழக்குகளுக்கு 60 மைல் செல்லவேண்டியிருக்கிறது. அதேபோல் புரோ சூட்ஸ்களில் 5 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட கேஸ் களுக்கு 500 மைல் தூரம் செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே விரைவாக அந்த "சபார்டினேட் ஜட்ஜ் கோர்ட்" டைக் கொண்டு வர வேண்டுமென்று கருதி அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உயர்நீதி மன்றம் அதற்குத் தருகின்ற முக்கியத்துவத்தைப் பொறுத்து அரசு முடிவெடுக்கும்.

2. உடுக்குறியிடாத வினா.

ஹையர் கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்.

4. கே. தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:—

1—8—1972 அன்றுள்ளவாறு, தமிழ் நாட்டில் ஹையர் கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் எத்தனை பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் ?

பதில் : 1—8—1972 தேதிக்கான தகவல் இல்லை. 30—6—1972 தேதி யில் ஹையர் கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்களில் வேலையின்றி இருந்தவர் களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண்கள்	..	2110
பெண்கள்	..	2181
மொத்தம்	..	4291

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடி வுற்றன.

(குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக் குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக் கும்.)